**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, CrPC)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No.72/2018 |
| Deposition of witness for Prosecution | : | P.W– 5 |
| Name | : | தங்கமாரியப்பன், வயது 51 |
| Father Name/Husband Name | : | தனபாலன் |
| Village | : | கோவில்பட்டி |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | குளிர்பானம் கடை |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 07th day of July 2026.

**(Accused absent. 317 CrPC petition filed and allowed).**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது கோவில்பட்டியில் வசித்து குளிர்பனக் கடை வைத்து நடத்தி வருகிறேன். ஆஜர் இல்லாத எதிரியை எனக்கு தெரியாது. அ.சா.1 யை எனக்கு தெரியாது. அ.சா.2 மற்றும் அ.சா.3 யை எனக்கு தெரியும். எதிரி ரூ.25,00,000/–த்திற்கு அவரது வீட்டை அ.சா.2 க்கு விற்பனை செய்ய பேசப்பட்டது. அ.சா.2 முன்பணமாக ரூ. 10,00,000/–த்தை எதிரிக்கு கொடுத்தார். அ.சா.2 ரூ. 15,00,000/–த்தை TMB வங்கியில் லோனாக பெற்று ரெப்கோ வங்கியில் அடமானம் இருந்த மேற்படி வீட்டிற்கு மாற்றினார். ஆனால் எதிரி அதன் பிறகு கிரையம் செய்து கொடுக்காமல் வீட்டை பூட்டி விட்டு ஓடிவிட்டார். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

2. மேற்படி வீட்டை காசிமாரியப்பனிடமிருந்து ராஜன் மற்றும் சண்முகலட்சுமி தற்போது எழுதி வாங்கி விட்டார்கள் என்றால் எனக்கு தெரியாது. எதிரி அவரது வீட்டிற்கு DTCP Approval இல்லை என்பதால் எழுதி கொடுக்கவில்லை என்றால் சரிதான், ஆனால் அனைத்து சரியான பிறகு எதிரி கையொப்பம் செய்ய வரவில்லை. அசல் ஆவணங்களை எதிரி மேற்படி ராஜன் மற்றும் சண்முகலட்சுமிக்கு கொடுத்துவிட்டார் என்றால்

அது பற்றி எனக்கு தெரியாது. TMB வங்கியிலிருந்து பெற்ற பணத்தை ராஜன் தற்போது முழுவதுமாக செலுத்தி முடித்துவிட்டார் என்றால் எனக்கு தெரியாது. இந்த வழக்கு பொறுத்து தற்போது எந்த வரவு, செலவுகளும் கிடையாது என்றால் எனக்கு தெரியாது. எதிரி கோவில்பட்டியில் காய்கறி தினசரி சந்தையில் காய்கறி கடை வைத்துள்ளார். நான் எதிரியிடம் காய்கறி வாங்குவேன். நான் எதிரியின் காய்கறிக் கடையில் ரூ.5, 10 அளவில் கடன் வைத்து காய்கறிக் வாங்குவேன். நான் எதிரிக்கு கடன் கொடுக்க வேண்டியது என்பதால் அவர் ஊரை விட்டு ஓடிவிட்டதால் அவருக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. K. Anand, B.A, M.L.,
Judicial Magistrate No.1,
Kovilpatti.